## மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# தேர்தல் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் 2 நாட்கள் நடக்கிறது

சென்னை, மார்ச்.12–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், பொது மக்களுக்கும் மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகளுக்கும் பாது காப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக மெட்ரோ, ரெயிலில் பயணம் செய்வது எவ்வளவு பாதுகாப்பானது என்பதைப் பயணிகளுக்கு தெரிவிக்கும் வகையில் மெட்ரோ ரெயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ ரெயில்களில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை கலைக்குழுவினருடன் இணைந்து நடத்தும் மெல்லிசை கலை நிகழ்ச்சி நாளை மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை விம்கோ நகர் மெட்ரோ ரெயில் நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை மெட்ரோ வரை நடக்கிறது.

மேலும் சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்திலிருந்து விமான நிலையம் மெட்ரோ வரை செல்லும் (கோயம்பேடு வழியாக) மெட்ரோ ரெயிலில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் நடைபெற உள்ள தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் நிமிர்வு கலையகம் அமைப்புடன் இணைந்து பின்வரும் தேதிகளில் மேற்கண்ட பல்சுவை விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சி களை நடத்தவுள்ளது.

நாளை மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை வடபழனி மெட்ரோ ரெயில் நிலையத்தில் பல்சுவை விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெறுகிறது.

14–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை கிண்டி மெட்ரோ ரெயில் நிலையத்தில் பல்சுவை விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது.